பத்தாம் வகுப்பு மாதிரி வினாத்தாள்,2025-2026

X-STD SAMPLE QUESTION PAPER, 2025-2026

தமிழ் (TAMIL 006)

கால அளவு: 3 மணி **Time allowed : 3 Hrs**

மொத்த மதிப்பெண்கள்: 80 **Maximum Marks : 80**

பகுதி - அ (படித்தல் திறன்)

Unseen Passage-10 Marks

1. அ .பின்வரும் உரைநடைப் பகுதியைப் படித்துக் கொடுக்கப்பட்ட பலவுள் தெரிவுசெய் வினாக்களுக்கு ஏற்ற விடை எழுதுக.. **(5x1=5)**

திருவள்ளுவர் போற்றிய விருந்தோம்பல் புதியவர்களுக்கானது. இன்று அது மறைந்துபோன ஒன்று எனக் கூறல் வேண்டும்; அதற்கு மாறான புதிய விருந்தோம்பல் முறை ஒன்று இன்று சமூகத்தில் செல்வாக்குப் பெற்றுள்ளது. நன்கு அறிமுகமானவர்க்கும் பசி அறியாதவர்க்கும் ஆடம்பரமான வகையில் பேருணவு படைக்கும் வழக்கம் இப்போது விருந்து என்று பெயர் பெறுகின்றது.. இது, தன்னலமின்றி நிகழ்ந்துவந்த பழைய விருந்தோம்பலுக்கு மாறானது. இந்தப் புதிய முறைக்குத் தன்னலமே அடிப்படை. ஒருவர் செய்த உதவியைப் பாராட்டியோ, செய்யக்கூடிய உதவியை எதிர்பார்த்தோ, அல்லது அவரால் கிடைக்கும் பெயர் புகழ் கருதியோ அவர்க்கு விருந்து வைப்பது இன்றைய வழக்கம். எளிய மக்களுக்கு - செல்வமும் செல்வாக்கும் இல்லாதவர்க்கு - இத்தகைய விருந்தில் இடம் இல்லை என்பதாலேயே இதன் உண்மை வடிவம் விளங்குகிறது அன்றோ? ஒருகால் ஏழை எளியவர்க்கு இந்த விருந்தில் எவ்வாறோ கண் மறைவாகத் தப்பித் தவறி இடம் கிடைப்பினும், அவர் விருந்து அளிப்பவரிடமிருந்து இன்சொல் பெறமுடியாது. விழாக்களை முன்னிட்டு நடைபெறும் விருந்துகளும் குறித்த ஒரு நாள் அல்லது சிலநாள் மட்டுமே நிகழும். திருவள்ளுவர் கூறுவதுபோல், விருந்தினரை நாள்தோறும் ஓம்புதல் இன்று இல்லை. விருந்து என்று குறித்த நாள் கழிந்த மறுநாள் அங்குக் காக்கையும் நாடாது; எளிய கஞ்சியும் அங்கு மறுநாள் பெறுதல் அரிது. ஆதலின் பரந்த உணர்வு பெறவேண்டும். . பண்டைக்காலத்தில் இல்வாழ்வாரிடம் அமைந்திருந்த விருந்தோம்புதல் இன்று இல்லை

வினாக்கள்

I. இக்காலத்தில் விருந்து யாருக்குத் தரப்படுகிறது ?.

A(புதியவர்க்கு B (அறிமுகமானவர்க்கு C (பசி அறியாதவர்க்கு

D) அறிமுகமானவர்க்கும் பசி அறியாதவர்க்கும்

II. இன்றுள்ள புதிய விருந்து முறைக்கு எது அடிப்படையாக உள்ளது?

A(புகழை எதிர்பார்த்தல் B (தன்னல அடிப்படை

C (பாராட்டை எதிர்பார்த்தல் D) பெயரை எதிர்பார்த்தல்

III. இத்தகைய விருந்தில் யாருக்கு இடம் இல்லை?

A(செல்வம் இல்லாதவர்க்கு B (செல்வாக்கு இல்லாதவர்க்கு

C (செல்வமும் செல்வாக்கும் இல்லாதவர்க்கு D) செல்வந்தர்க்கு

IV. விருந்தோம்பலை எப்போது செய்ய வேண்டும் என்கிறார் திருவள்ளுவர்?

A(நாள்தோறும் B (விழா நாள்களில் C (பண்டிகை நாள்களில்

D) பிறந்த நாளில்

V. திருவள்ளுவர் போற்றிய விருந்தோம்பல் யாருக்கானது?

A(உறவினர்களுக்கானது B (நண்பர்களுக்கானது

C (அண்டை வீட்டாருக்கானது D) புதியவர்களுக்கானது

2. <u>பின்வரும் பத்தியைப் படித்து அதனைத் தொடர்ந்து வரும் வினாக்களுக்கு உரிய விடைகளை எழுதுக</u>. (5×1=5)

வலுவான வரலாற்று ஆதாரங்களைக்கொண்டிருக்கும் சமூகத்தினர் நாம். சங்கஇலக்கியம் உரைத்த வரலாற்றுச் சான்றுகளைக் கீழடிச் சான்றுகள் உறுதிப்படுத்துகின்றன இரண்டாயிரம்ஆண்டுகளுக்கு முன்பே கீழை மற்றும் மேலைநாடுகளுடன் வாணிபத் தொடர்பைத் தமிழர்கள் மேற்கொண்டிருந்தனர் என்று சிலப்பதிகாரம், பரிபாடல், மதுரைக்காஞ்சி போன்ற பண்டைய தமிழ்இலக்கியங்கள் பறைசாற்றிவந்தன. இந்த வரலாற்று உண்மையை அறிவியல் முறையில் உறுதிப்படுத்தும் விதத்தில்,தொல்லியல் அகழாய்வுகளில் கரிம மாதிரிகள் கிடைத்துள்ளன .அமெரிக்காவின் மியாமி நகரில்அமைந்துள்ள பீட்டா பகுப்பாய்வு ஆய்வகத்திற்கு அனுப்பப்பட்டு.காலக் கணக்கீடு செய்யப்பட்டுள்ளது.

ஆதிச்சநல்லூரில் கிடைத்த முதுமக்கள் தாழி கி.மு.எட்டாம் நூற்றாண்டுக்கும் ஆறாம் நூற்றாண்டுக்கும் இடைப்பட்டது . கீழடியில் கிடைத்த எச்சங்கள் 2500ஆண்டுகளுக்கு முன்பே தமிழர்கள் எழுத்தறிவு பெற்றிருந்ததைக் கணிக்க உதவின. சிவகளை அகழாய்வில்கிடைக்கப்பெற்ற நெல்மணிகளைக் கரிமப்பகுப்பாய்வுக்கு உட்படுத்தியபோது அதன் வயது கி.மு. 1,155 என்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. கொற்கை அகழாய்வில் கிடைக்கப்பெற்ற மேற்கத்திய நாட்டுப் பானை ஓடுகளும், வெள்ளிக் காசுகளும் பண்டைக்காலத்திலேயே பன்னாட்டு வணிகம் நடைபெற்றமைக்குச் சான்று

பகர்கின்றன.,.தொடரும் ஆய்வுகள் நம்முடைய தொன்மையை மட்டும் அல்லாது வரலாற்று மேன்மையையும் வெளிப்படுத்துகின்றன!

Uண்டைய தமிழ் அரசுகள் 2000 ஆண்டுகளுக்கு முன்னரே மாபெரும் கடல்வல்லரசுகளாகவும் இருந்துள்ளன. இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனும், சேரன் செங்குட்டுவனும் தம் கடற்படை மூலம் கடம்பக்கொள்ளையர்களை அழித்தனர் எனப் பதிற்றுப்பத்து குறிப்பிடுகிறது

வினாக்கள்

I. மேலைநாடுகளுடன் தமிழர்கள் கொண்டிருந்த வாணிபத் தொடர்பைக் கூறும் இலக்கியங்கள் யாவை?
II. வரலாற்று உண்மையை அறிவியல் முறையில் உறுதிப்படுத்த ஆய்வாளர்கள் செய்வன யாவை?
III. பதிற்றுப்பத்து குறிப்பிடும் வரலாற்றுச் செய்தி யாது ?
IV. தமிழர்கள் எத்தனை ஆண்டுகளுக்கு முன் எழுத்தறிவு பெற்றிருந்தனர்?
V. சிவகளை நெல்மணி கூறும் செய்தி யாது ?

பகுதி - ஆ (இலக்கணப்பகுதி)

Grammar-12 Marks

3. சான்று தருக :(எவையேனும் மூன்றனுக்கு மட்டும்) **(3x1=3)**

I. தொடர்மொழி

. A) படித்தான் B). அறம் வெல்க C) கை D) இசைத்தாய்

II. உருபும் பயனும் உடன் தொக்கத் தொகை

A(வானவில் B (குறள் படி C (மாதவி மகள்

D).மலை ஏறினான்

III. மரபு வழாநிலை

A) தென்னஞ்செடி B) தென்னை இலை C) மாவிலை

D) கரும்பு ஓலை

IV. வினைமுற்றுத் தொடர்

A) சென்ற கோதை B) நல்ல மாணவன்

C) படித்தான் பாரி D) வாய்மையே வெல்லும்

V. செய்யுளிசை அளபெடை

A(உரனசைஇ B (கெடுப்பதூஉம் C (ஆஅளிய D) உடுப்பதும்

4. கோடிட்ட இடங்களை நிரப்புக: (மூன்று மட்டும்) (3x1=3)

I. பொருள்கோள் _____வகைப்படும்.

A) ஆறு B) ஏழு C) எட்டு D) ஒன்பது

II. ஐந்தொகைகளின் புறத்தே வேறு சில மறைந்துவரும் தொகை ___

A) வேற்றுமைத்தொகை B) உவமைத்தொகை

C) உம்மைத்தொகை D) அன்மொழித்தொகை

III. முதுவேனில் காலத்தைப் பொழுதாக உடைய திணைகள்

A) குறிஞ்சி,முல்லை,மருதம் B) முல்லை, மருதம்,நெய்தல்

இ) மருதம் ,நெய்தல்,குறிஞ்சி D) மருதம், நெய்தல் பாலை

IV. வெளிப்படை விடைகள் ..... ஆகிய மூன்றும்ஆகும்.

A) சுட்டு ,ஏவல், மறை B) சுட்டு , மறை,நேர்

C) சுட்டு , மறை,இனமொழி D) சுட்டு , வினா ,நேர்

V. வினையைக் குறிக்காமல் வினை செய்தவனைக் குறிப்பது _____

A(. தொழிற்பெயர் B (பண்புப்பெயர்

C (வினையாலணையும் D).படர்க்கைப் பெயர்

5. இலக்கணக் குறிப்பு எழுதுக. (எவையேனும் மூன்றனுக்கு மட்டும்)

(3x1=3)

I. யானோ அரசன்

A(.இடைச்சொல் தொடர் B(. வினைத் தொடர்

C (உரிச்சொல் தொடர் D) எழுவாய்த் தொடர்

II. நிலா நிலா ஓடிவா

A(மரபு வழு B (திணை வழு C (காலவழு

D) .மரபு வழுவமைதி

III. சாணம் மெழுகினாள்

A. இரண்டாம் வேற்றுமைத்தொகை

B. மூன்றாம் வேற்றுமைத்தொகாநிலை

C. இரண்டாம் வேற்றுமைத்தொகாநிலை

D. மூன்றாம் வேற்றுமைத்தொகை

IV. எங்ங்கிறைவன்

A(மெய்யளபெடை B (ஒற்றளபெடை C (உயிரளபெடை

D) ஆய்தக்குறுக்கம்

V. புலி வில் கயல்

A) வேற்றுமைத்தொகை B) உவமைத்தொகை

C (உம்மைத்தொகை D) உம்மை விரி

6. கூறியவாறு செய்க (எவையேனும் மூன்றனுக்கு மட்டும்) (3x1=3)

I. சுடு மண் (பெயரெச்சத் தொடராக்குக)

A) மண் சுடும் B) சுடுகின்ற மண் C) சூடுகின்ற மண்

D) மண் சுடுமா?

II. உணவு உண்டாயா? (இக்கேள்விக்கு உற்றது உரைத்தல் விடை எழுதுக)

A) வயிறு வலிக்கும் B) பால் குடித்தேன்

C) உண்ணவில்லை D) வயிறு வலித்தது

III. எலியைப் பிடிக்கும் பொறி (உருபும் பயனும் உடன்தொக்கத் தொகையாக்குக)

A) எலியது பொறி B) எலியினது பொறி

C) எலிக்குப் பொறி D) எலிப்பொறி

IV. பொய்கை (நெய்தலுக்கு உரிய நீர்நிலை ஆக்குக)

A) அருவி நீர் B) உவர்க்கழி C) காட்டாறு ஈ. சுனைநீர்

V. எள்ளை உண் (பொதுமொழி ஆக்குக)

A(எள் B (எட்டு C (எள் உண் D) எள் து

பகுதி - இ -(இலக்கியம்)

Main course book -31 Marks

7. பின்வரும் கோடிட்ட இடங்களைத் திருக்குறள் சீர்களால் நிரப்புக

[3x1=3).

I. எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்

மெய்ப்பொருள் ..... தறிவு

A) அறிவ B) உணர்வ C) காண்ப D) தெரிவ

II. நாள்தோறும் நாடி முறைசெய்யா _____

நாள்தோறும் நாடு கெடும்

A) வேந்தன் B) மன்னவன் C) அரசன் D) மக்கள்

III. குற்றம் இலனாய்க் குடிசெய்து _____

சுற்றமாய்ச் சுற்றும் உலகு

A) சேர்வானைச் B) வாழ்வானைச் C) நிற்பானைச்

D) உயர்வானைச்

8. <u>பின்வரும் செய்யுள் பகுதியைத் தொடர்ந்துள்ள பலவுள்தெரிவு செய். வினாக்களுக்கு ஏற்ற விடை எழுதுக</u>. **[5x1= 5]**

"உறங்கு கின்ற கும்ப கன்ன வுங்கண் மாய வாழ்வெலாம்
இறங்கு கின்ற தின்று காணெ ழுந்தி ராயெ ழுந்திராய்
கறங்கு போல விற்பி டித்த கால தூதர் கையிலே
உறங்கு வாயு றங்கு வாயி னிக்கி டந்து றங்குவாய்"

<u>வினாக்கள்</u>

I. இச்செய்யுள் இடம் பெற்றுள்ள நூலின் பெயர் என்ன?

A) தேம் பாவணி B) கம்பராமாயணம்

C) சீவகசிந்தாமணி D) திருவாசகம்

II. இந்நூலின் ஆசிரியர் யார்?

A) உமறுப்புலவர் B) சேக்கிழார் C) வீரமாமுனிவர்

D) கம்பர்

III. இச்செய்யுள் இடம் பெற்றுள்ள படலத்தின் பெயர் என்ன?

A) நாட்டுப்படலம் B) ஆற்றுப்படலம்

(இ) கங்கைப்படலம் D) கும்பகர்ணன் வதைப்படலம்

IV. கறங்கு என்ற சொல்லின் பொருள் என்ன?

A) எமன் B) காற்றாடி C) வில் D) அம்பு

V. இச்செய்யுளில் அமைந்த சந்தம் எதைப்போன்று உள்ளது ?

A(கடப்பாரையால் இடிப்பது போன்ற சந்தம்

B) உலக்கையால் இடிப்பது போன்ற சந்தம்

C) அம்மியில் அரைப்பது போன்ற சந்தம்

D) சிங்கம் முழங்குவது போன்ற சந்தம்

9. <u>பின்வரும் செய்யுள் வினாக்களுள் எவையேனும் இரண்டனுக்கு விடை தருக</u> **(2x4=8)**

I. தமிழன்னையை வாழ்த்துவதற்கான காரணங்களாகப் பாவலரேறு சுட்டுவன யாவை?.

II. முல்லைப்பாட்டு காட்டும் கார்காலச் செய்திகளை விவரி

III. திருவித்துவக்கோட்டு அம்மானை குலசேகரர் வாழ்த்துவது எப்படி?

IV. முயற்சியின் சிறப்பு குறித்து திருக்குறள் மொழிவன யாவை?

10. எவையேனும் மூன்று உரைநடை வினாக்களுக்கு விடையளி

(3x5=15)

I. காற்று எவ்வாறெல்லாம் ஆற்றலாகத் திகழ்கிறது

II. வறுமையிலும் விருந்தோம்பினர் தமிழர்- விளக்குக.

III. மெய்நிகர் உதவியாளர் குறித்து விவரி

IV. தமிழ்மொழி பொருள்வளம் உடையது என்பதை விளக்குக

V. திரைத்துறையில் கலைஞரின் பங்களிப்பை விவரித்து எழுதுக

பகுதி - ஈ (துணைப்பாடம்)

Section –D Non-detail-10 Marks

11. பின்வருவனவற்றுள் ஏதேனும் ஒரு துணைப்பாடக் கட்டுரை எழுது

1x10=10

I. புயலிலே ஒரு தோணி

II. புதிய நம்பிக்கை

III. பாய்ச்சல் சிறுகதைச் சுருக்கம்

பகுதி - உ (படைப்பாற்றல்)

Section -E Creative Writing-17 Marks

12. **. அ.கீழ்க்காணும் காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.** **(3)**



ஆ. பார்வைத்திறன் பாதிக்கப்பட்ட மாற்றுத்திறனாளி மாணவர்கள் மட்டும் எழுத வேண்டிய வினா.

பின்வரும் பழமொழிகளைத் தொடரில் அமைத்து எழுதுக. **(3)**

I. எருது புண் காக்கை அறியுமா ?

II. ஏட்டுச் சுரைக்காய் கறிக்கு உதவாது.

13. **கடிதம் எழுதுக** **(1x8=8)**

I. வருமானச் சான்றிதழ் வேண்டி வட்டாட்சியர்க்கு விண்ணப்பக் கடிதம் எழுதுக

II. அல்லது

III. மனவளத்தை வளர்த்துக் கொள்ளும் முறை குறித்து அயலூர் நண்பனுக்குக் கடிதம் எழுதுக.

[இரண்டு கடிதங்களிலும் உன் முகவரி: **அ, அறவாழி /அ.நறுமுகை 10. சுடர் குடியிருப்பு , அண்ணாநகர் மேற்கு , சென்னை-600040** எனக்கொள்க]

14. **ஏதேனும் ஒரு பகுதியின் குறிப்புகளைப் பயன்படுத்திக் கட்டுரை ஒன்று எழுதுக.** **1x6=6**

I. முன்னுரை - தகவல் ஊடகங்கள் -ஊடக வகைகள் - செய்தித்தாள் வானொலி,தொலைக்காட்சி ,சமூக வலைத்தளங்கள் – ஊடகத்தால் ஏற்படும் நன்மைகள் - எதிர்மறை விளைவுகள்- முடிவுரை.

II. முன்னுரை - முன்தோன்றி மூத்த தமிழ் - இலக்கிய வளம்- இலக்கணச்சிறப்பு- பழமையும் புதுமையும் - அறிவியல் தமிழ் இணையத் தமிழ் -முடிவுரை.

III. முன்னுரை - வரதட்சணை என்னும் தீய நடைமுறை - பெண்களுக்கான அநீதி - அரசாங்கத்தின் முயற்சி- பெண்கள் அடையும் துயர் - சமநீதி காண்போம் - மகிழ்வான வாழ்வு - முடிவுரை.

பத்தாம் வகுப்பு மாதிரி வினாத்தாள், 2025-2026

Class X Marking Scheme

தமிழ் (TAMIL 006)

கால அளவு: 3 மணி **Time allowed : 3 Hrs**

மொத்த மதிப்பெண்கள்: 80 **Maximum Marks : 80**

பகுதி - அ (படித்தல் திறன்)

Unseen Passage-10 Marks

1. அ .பின்வரும் உரைநடைப் பகுதியைப் படித்துக் கொடுக்கப்பட்ட பலவுள் தெரிவுசெய் வினாக்களுக்கு ஏற்ற விடை எழுதுக.. **(5x1=5)**

I. D) அறிமுகமானவர்க்கும் பசி அறியாதவர்க்கும்

II. B) தன்னல அடிப்படை

III. C) செல்வமும் செல்வாக்கும் இல்லாதவர்க்கு

IV. A) நாள்தோறும்

V. D) புதியவர்களுக்கானது

2. பின்வரும் பத்தியைப் படித்து அதனைத் தொடர்ந்து வரும் வினாக்களுக்கு உரிய விடைகளை எழுதுக. **(5×1=5)**

1. **சிலப்பதிகாரம்**, **பரிப்பாடல்**, **மதுரைக்காஞ்சி**
2. அமெரிக்காவின் மியாமி நகரில்அமைந்துள்ள பீட்டா பகுப்பாய்வு ஆய்வகத்திற்கு அனுப்பப்பட்டு.காலக் கணக்கீடு செய்யப்பட்டுள்ளது.
3. இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனும், சேரன் செங்குட்டுவனும் தம் கடற்படை மூலம் கடம்பக்கொள்ளையர்களை அழித்தனர் எனப் பதிற்றுப்பத்து குறிப்பிடுகிறது
4. 2500
5. சிவகளை அகழாய்வில் கிடைக்கப்பெற்ற நெல்மணிகளைக் கரிமப்பகுப்பாய்வுக்கு உட்படுத்தியபோது அதன் வயது கி.மு. 1,155 என்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

பகுதி - ஆ (இலக்கணப்பகுதி)

Grammar-12 Marks

3. சான்று தருக: (எவையேனும் மூன்றனுக்கு மட்டும்) **(3x1=3)**

I. B). அறம் வெல்க
II. A) வானவில்
III. C) மாவிலை
IV. C) படித்தான் பாரி
V. C) ஆஅளிய

4. கூறியவாறு செய்க (எவையேனும் மூன்றனுக்கு மட்டும்) **3X1 = 3**

I. C) எட்டு
II. D) அன்மொழித்தொகை
III. D) மருதம், நெய்தல் பாலை
IV. B) சுட்டு , மறை,நேர்
V. C) வினையாலணையும்

5. இலக்கணக் குறிப்பு தருக (எவையேனும் மூன்றனுக்கு மட்டும்) **3 x 1 = 3**

I. A) .இடைச்சொல் தொடர்
II. D) .மரபு வழுவமைதி
III. D) மூன்றாம் வேற்றுமைத்தொகை
IV. B) ஒற்றளபெடை
V. C) உம்மைத்தொகை

6. **கோடிட்ட இடத்தை நிரப்புக**. (**எவையேனும் மூன்றனுக்கு மட்டும்**)

3 X 1 = 3

I. B) சுடுகின்ற மண்
II. D) வயிறு வலித்தது
III. D) எலிப்பொறி
IV. B) உவர்க்கழி
V. B) எட்டு

பகுதி - இ - (இலக்கியம்)

Main course book -31 Marks

7. பின்வரும் கோடிட்ட இடங்களைத் திருக்குறள் சீர்களால் நிரப்புக

[3x1=3).

I. C) காண்பர்

II. B) மன்னவன்

III. B) வாழ்வானைச்

8. பின்வரும் செய்யுளைப் படித்து அதனைத் தொடர்ந்து வரும் பலவுள் தெரிவு வினாக்களுக்கு விடையளி. 5x1=5

I. B) கம்பராமாயணம்

II. D) கம்பர்

III. D) கும்பகர்ணன் வதைப்படலம்

IV. B) காற்றாடி

V. B) உலக்கையால் இடிப்பது போன்ற சந்தம்

9. பின்வரும் செய்யுள் வினாக்களில் எவையேனும் இரண்டனுக்கு விடையளி: 3x3=9

விடைகள் பிழைகள் இன்றி சரியாக இருந்தால் முழு மதிப்பெண் வழங்கலாம்

10. பின்வரும் உரைநடை வினாக்களில் எவையேனும் மூன்றனுக்கு மட்டும் விடையளி: 3×5=15

விடைகள் பிழைகள் இன்றி சரியாக இருந்தால் முழு மதிப்பெண் வழங்கலாம்

பகுதி - ஈ (துணைப்பாடம்)

Section –D Non-detail-10 Marks

11. பின்வருவனவற்றுள் ஏதேனும் ஒரு துணைப்பாடக் கட்டுரை எழுது

1x10=10

முன்னுரை- 1 மதிப்பெண்

துணைத் தலைப்புகளுடன் கூடிய பொருளுரை-8 மதிப்பெண்கள்

முடிவுரை - 1 மதிப்பெண்.

பகுதி - உ (படைப்பாற்றல்)

Section -E Creative Writing-17 Marks

12. காட்சியைக் கொண்டு கவினுற எழுதுக. **1×3=3**

முப்பது சொற்களுக்குக் குறையாத அல்லது 5 தொடர்களும் தலைப்புடன் இருப்பின் முழு மதிப்பெண் வழங்குக.

13.. கடிதம் வரைக : **1×8=8**

அலுவல் முறைக் கடிதம்

I. அனுப்புநர் - 1
II. பெறுநர் -1
III. விளி -½
IV. பொருள் -½
V. உள்ளடக்கம் -3
VI. முடிப்பு -½
VII. இடம்,தேதி ½
VIII. உறைமேல்முகவரி-1

நட்பு/உறவு முறைக் கடிதம்

இடம்,தேதி - 1
விளி -½
நலம் கேட்டல்- 1
உள்ளடக்கம் -3½
முடிப்பு -1
உறைமேல்முகவரி-1

14. பின்வருவனவற்றுள் ஏதேனும் ஒரு பகுதியின் குறிப்புகளைக் கொண்டு கட்டுரை வரைக. **1×6=6**

தலைப்பு - ½
முன்னுரை - ½
உட்தலைப்புகளுடன் கூடிய பொருளுரை - 4
முடிவுரை - ½
மேற்கோள் - ½

கட்டுரை பிழையின்றி எழுதியிருப்பின் முழுமதிப்பெண் வழங்கலாம். குறைந்த பட்சம் 4 மதிப்பெண் வழங்கலாம்.

பத்தாம் வகுப்பு மாதிரி வினாத்தாள் 2024-2025

X-STD SAMPLE QUESTION PAPER 2024-2025

தமிழ் (TAMIL 006)

கால அளவு; 3 மணி **மொத்த மதிப்பெண்கள்; 80**

Time allowed 3 Hrs **Maximum Marks:80**

General Instruction:

பொதுவான வழிமுறைகள்;

The questions paper contains FIVE section.

இவ்வினாத்தாள் ஐந்து பகுதிகளைக் கொண்டுள்ளது.

SECTION –A(Reading) 10 Marks

பகுதி – அ படித்தல் திறன் -10 மதிப்பெண்கள்

SECTION –B(Grammar) 12

பகுதி – ஆ இலக்கணப் பகுதி – 12 மதிப்பெண்கள்

SECTION- C (Main Course Book) 31 Marks

பகுதி –இ இலக்கியம் – 31 மதிப்பெண்கள்

SECTION- D (Non-Detail) 10 Marks

பகுதி – ஈ துணைப்பாடம் – 10 மதிப்பெண்கள்

SECTION – E (Creative Writing) 17 Marks

பகுதி – உ படைப்பாற்றல் – 17 மதிப்பெண்கள்

இந்த வினாத்தாளில் அச்சிடப்பெற்ற 10 பக்கங்கள் உள்ளதைச் சரிபார்க்கவும்.

இந்த வினாத்தாளில் 14 வினாக்கள் உள்ளனவா எனச் சரிபார்க்கவும்.

எழுதத் தொடங்குவதற்கு முன் வினாவரிசை எண்ணைக் குறிப்பிடவும்.

Please check that this question paper contain 10 printed pages.

Please check that this question paper contain 14 parts of the question.

Please write down the serial number of the question before attempting it.

SECTION-A (READING) 10 MARKS

பகுதி –அ (படித்தல் திறன்) 10 மதிப்பெண்கள்

1.பின்வரும் உரைநடைப் பகுதியைப் படித்துக் கொடுக்கப்பட்ட பலவுள் தெரிவுசெய் வினாக்களுக்கு ஏற்ற விடை எழுதுக. (5X1=5)

கலிலியோ 26 வயதிலேயே பைசா பல்கலைக்கழகத்தில் கணிதத்துறைப் பேராசிரியராக உயர்ந்தார். அவருக்கு நானூறு ஆண்டுகளுக்கு முன்பே, புராதனக் கொள்கைகளையும் நம்பிக்கைகளையும் மக்கள் கண்மூடிப் பின்பற்றி வந்தனர். கிரேக்கத் தத்துவஞானி அரிஸ்டாட்டில்தான் எல்லாரையும் விட உயர்ந்தவராகக் கருதப்பட்டார். அவருடைய சூத்திரங்களைப் பற்றிக் கேள்வி எழுப்புவது இழுக்காகக் கருதப்பட்டது. ஒரு பொருள் என்ன வேகத்தில் கீழே விழுகிறது என்பதில் அப்பொருளின் எடைக்கு எந்தப் பங்கும் இல்லை என்பதை நிருபித்தார் கலிலியோ. ஒரு பொருள் கீழே விழும் வேகம், அது எதிர்கொள்ளும் காற்றுத்தடையைப் பொறுத்தது என்றார் அவர். இது அரிஸ்டாட்டிலின் சூத்திரத்துக்கு மாறாக இருந்தது. தன்னுடைய கண்டுபிடிப்பை கலிலியோ நிருபித்துக் காட்டினார் என்றாலும், அவருடைய கூற்றை நம்ப மறுத்தனர். அரிஸ்டாட்டிலின் ஒரு கொள்கையை நிராகரித்து மறுத்தால் அவருடைய இதர கொள்கைகளையும் மறுக்க வேண்டிய நிலை வந்துவிடக்கூடும் என்று அஞ்சினர். கலிலியோவுக்கு ஆதரவுதர ஒருவர்கூட முன்வரவில்லை. ஆனால் அவருடைய கொள்கையில் உறுதியாக இருந்தார். பின்னர் அவருடைய கருத்து ஏற்றுக் கொள்ளப்பட்டது புகழும் பெற்றது.

வினாக்கள் :

(i) கலிலியோ எந்தத்துறையில் பேராசிரியராக உயர்ந்தார்?

(A) தமிழ்த்துறை (B) கணிதத்துறை

(C) ஆங்கிலத்துறை (D) அறிவியல்துறை

(ii) அரிஸ்டாட்டில் எந்த நாட்டுத் தத்துவஞானி?

(A) கிரேக்கம் (B) ரோம் (C) இந்தியா (D) ஜெர்மன்

(iii)கலிலியோ எந்த வயதில் பைசா பல்கலைக்கழகத்தில் கணிதத்துறைப் பேராசிரியராக உயர்ந்தார்.?

(A) 25 (B) 28 (C) 26 (D) 3

(iv) ஒரு பொருள் என்ன வேகத்தில் கீழே விழுகிறது என்பதில் அப்பொருளின் எடைக்கு எந்தப் பங்கும் இல்லை என நிரூபித்தவர் யார்?

(A) அரிஸ்டாடில் (B) தாம்சன் (C) கலிலியோ (D) இராமானுஜம்

(v) புராதனக் கொள்கைகளையும்,நம்பிக்கைகளையும் மக்கள் எத்தனை ஆண்டுகளுக்கு முன்பு கண்மூடிப் பின்பற்றி வந்தனர்?

(A) 200 (B) 500 (C) 300 (D) 400

2.பின்வரும் பகுதியைப் படித்து கொடுக்கப்பட்டுள்ள வினாக்களுக்கேற்ற விடை எழுதுக. (5X1=5)

உண்ணா நோன்பு இருப்போர் வடதிசையை நோக்கி அமர்வது வழக்கமாக இருந்திருக்கிறது. கவுந்தியடிகளும் வடதிசை நோக்கி அமர்ந்துதான் உயிர் துறந்திருக்க வேண்டும்.அந்நாளிலே,வடபுலம் புண்ணியத்திசையாகக் கருதப்பட்டது.சோழநாட்டின் மாமன்னனான கரிகால் வளவன் வடபுலம் சென்றதைக் கூறுமிடத்து "புண்ணியத் திசை முகம் போயினன்"என்கிறார் இளங்கோ. வடபேரிமய மலையில்தான் சிவபெருமான் உறையும் கயிலாயம் இருப்பதாகத் தமிழர் நம்புகின்றனர்.அதனால் வடபுலம் புண்ணியத் திசையாகக் கருதப்பட்டிருக்கலாம்.

வினாக்கள்:

(i) கரிகால் வளவன் வடபுலம் சென்றதைக் குறிக்கும் தொடரை எழுதுக.

(ii) புண்ணியத் திசையாகக் கருதப்பட்ட திசை எது?

(iii) சோழ நாட்டின் மாமன்னன் யார்?

(iv) கயிலாயம் இருப்பதாகத் தமிழர் நம்பிய மலை எது?

(v) உண்ணா நோன்பு இருப்போர் எத்திசை நோக்கி அமர்வது வழக்கமாக இருந்தது?

SECTION-B {GRAMMAR} 12 MARKS

பகுதி-ஆ (இலக்கணப் பகுதி) 12 மதிப்பெண்கள்.

3. சான்று தருக. (எவையேனும் மூன்றனுக்கு மட்டும்) 3X1=3

(i) வினையாலணையும் பெயர்

(A) பொறுத்தார் (B) கெடுதல் (C) எங்ங்கிறைவன் (D) உரனசைஇ

(ii) இருபெயரொட்டுப் பண்புத்தொகை

(A) தாய்சேய் (B) மலர்க்கை (C) மார்கழித்திங்கள் (D) கொல்களிறு

(iii) எழுவாய்த்தொடர்

(A) பாடினாள் கண்ணகி (B) காவிரி பாய்ந்தது

(C) அன்பால் கட்டினார் (D) வருக வருக

(iv) மரபு வழுவமைதி

(A) கத்துங்குயிலோசை (B) வாடா கண்ணா

(C) என் அம்மை வந்தாள் (D) இந்த மாறன் ஒருநாளும் பொய்கூற மாட்டான்

(v) முல்லை நிலக் கடவுள்

(A) முருகன் (B) இந்திரன் (C) வருணன் (D)திருமால்

4.கோடிட்ட இடங்களை நிரப்புக. (எவையேனும் மூன்றனுக்கு மட்டும்) 3X1=3

(i) அன்புடைய தலைவன் தலைவி இடையிலான உறவுநிலைகளைக் கூறுவது ----------
---

(A) புறத்திணை (B) கைக்கிளை (C) அகத்திணை (D) பெருந்திணை

(ii) ஐயம் நீங்கித் தெளிவு பெறுவதற்காகக் கேட்கப்படுவது ----------

(A) ஐய வினா (B) கொளல் வினா (C) ஏவல் வினா (D) அறிவினா

(iii) அஃறிணையில் பலவற்றைக் குறிப்பது ---------- ஆகும்.

(A) ஆண்பால் (B) பலவின்பால் (C) பெண்பால் (D) பலர்பால்

(iv) வினைப்பகுதியும் அடுத்துப் பெயர்ச் சொல்லும் அமைந்த

சொற்றொடர்களிலேயே ---------- அமையும்.

(A) பண்புத்தொகை (B) உவமைத்தொகை

(C) அன்மொழித்தொகை (D) வினைத்தொகை

(v) செய்யுளில் ஒரு பெயர்ச்சொல் எச்சச் சொல்லாகத் திரிந்து அளபெடுப்பது ----

---

(A) சொல்லிசை அளபெடை (B) ஒற்றளபெடை

(C) செய்யுளிசை அளபெடை (D) உயிரளபெடை

5. இலக்கணக் குறிப்பு எழுதுக; (எவையேனும் மூன்றனுக்கு மட்டும்) 3X1=3

(i) ஈதல்

(A) தனிமொழி (B) தொடர்மொழி (C) பொதுமொழி (D) தொழிற்பெயர்

(ii) கெழீஇ

(A) சொல்லிசை அளபெடை (B) செய்யுளிசை அளபெடை

இன்னிசை அளபெடை (D) ஒற்றளபெடை

(iii) கேட்ட பாடல்

(A) வினைமுற்றுத்தொடர் (B) பெயரெச்சத்தொடர்

(C) வினையெச்சத்தொடர் (D) வேற்றுமைத்தொடர்

(iv) ஊழ் ஊழ்

(A) வினைத்தொகை (B) ஈறுகெட்ட எதிர்மறைப்பெயரெச்சம்

(C) பண்புத்தொகை (D) அடுக்குத் தொடர்

(v) காடனுக்கும் கபிலனுக்கும்

(A) வினையாலணையும் பெயர் (B) எண்ணும்மை

(C) உவமைத்தொகை (D) உம்மைத்தொகை

6. கூறியவாறு செய்க; (எவையேனும் மூன்றனுக்கு மட்டும்) 3X1=3

(i) உடுப்பதூஉம் (அளபெடையை நீக்குக)

(A) உடுப்பதூஉம் (B) உடுப்பதும் (C) உடுப்பதூஊம் (D) உடுப்பதுவும்

(ii) பாடு (தொழிற்பெயராக்குக)

(A) பாடினான் (B) பாடி (C) பாடிய (D) பாடுதல்

(iii) மலர் (தொடர் மொழியாக்குக)

(A) மலர்ந்தது (B) மலர்கின்றது (C) மலர் மணம் வீசியது (D) மலரும்

(iv) பட்டினம், பாக்கம் (எந்நிலத்திற்குரிய ஊர்)

(A) குறிஞ்சி (B) முல்லை (C) நெய்தல் (D) பாலை

(v) வெற்றிலையும் பாக்கும் (உம்மைத்தொகையாக்குக)

(A) வெற்று இலை பாக்கும் (B) வெறு இலை பாக்கும்

(C) வற்றுஇலை பாக்கு (D) வெற்றிலை பாக்கு

SECTION-C (MAIN COURSE BOOK) 31 MARKS

பகுதி இ (இலக்கியம்) 31 மதிப்பெண்கள்

7. பின்வரும் கோடிட்ட இடங்களைத் திருக்குறள் சீர்களால் நிரப்புக. 2X1= 2

(i) செய்க பொருளைச் ---------- செருக்கறுக்கும்

எஃகதனிற் கூரிய தில்

(A) பெறுநர் (B) விடுநர் (C) செறுநர் (D) வறுநர்

(ii) பெயக்கண்டும் நஞ்சுண் டமைவர் ----------

நாகரிகம் வேண்டு பவர்

(A) நயத்தக்க (B) வியத்தக்க (C) பயத்தக்க (D) அயத்தக்க

8. பின்வரும் செய்யுள் பகுதியைப் படித்து தொடர்ந்துள்ள பலவுள் தெரிவு செய் வினாக்களுக்கு ஏற்ற விடை எழுதுக. 5X1=5

" ஆழ நெடுந்திரை யாறு கடந்திவர் போவாரோ

வேழ நெடும்படை கண்டு நடுங்கிடும் வில்லாளோ

தோழமை யென்றவர் சொல்லிய சொல்லொரு சொல் அன்றோ

ஏழமை வேட னிறந்தில னென்றெனை யேசாரோ"

வினாக்கள்;

(i) இவ்வரிகள் இடம்பெற்ற நூல் எது?

(A) மகாபாரதம் (B) கந்தபுராணம் (C) கம்பராமாயணம் (D) ராமாயணம்

(ii) நெடுந்திரை- என்பதின் பொருள்

(A) அலை (B) பெரிய அலை (C) சிறியஅலை (D) ஆறு

(iii) வேழ நெடும்படை எது?

(A) குதிரைபடை (B) காலட்படை (C) தேர்ப்படை (D) யானை படை

(iv) ஏழமை வேடன் யார்?

(A) பரதன் (B) குகன் (C) கண்ணப்பன் (D) வியாசர்

(v) இப்பாடல் வரிகளை இயற்றிய ஆசிரியர் யார்?

(A) இளங்கோவடிகள் (B) கபிலர் (C) திருவள்ளுவர் (D) கம்பர்

9. பின்வரும் செய்யுள் வினாக்களுள் எவையேனும் மூன்றனுக்கு மட்டும் விடை தருக. 3X3=9

(i) தமிழன்னையை வாழ்த்துவதற்கான காரணங்களாகப் பாவலரேறு சுட்டுவன யாவை?

(ii) கூத்தனைக் கூத்தன் ஆற்றுப்படுத்தலைக் கூத்தராற்றுப்படை எவ்வாறு காட்டுகிறது?

(iii) '' மாளாத காதல் நோயாளன் போல '' என்னும் தொடரிலுள்ள உவமை சுட்டும் செய்தியை விளக்குக.

(iv) மன்னன் இடைக்காடனார் என்ற புலவனுக்குச் சிறப்புச் செய்தது ஏன்? விளக்கம் தருக.

(v) வள்ளுவம், சிறந்த அமைச்சருக்குக் கூறிய இலக்கணங்கள் நமக்கும் பொருந்துவதைக் குறள்வழி விளக்குக.

10. பின்வரும் உரைநடை வினாக்களில் எவையேனும் மூன்றனுக்கு மட்டும் விடை தருக. 3X5=15

(i) நெகிழிப் பைகளின் தீமையைக் கூறும் பொம்மலாட்டம் உங்கள் பள்ளியின் ஆண்டு விழாவில் நிகழ்த்தப்படுகிறது. அதற்குப் பாராட்டுரை ஒன்றினை எழுதுக.

(ii) மொழிபெயர்ப்பு பயன் குறித்து எழுதுக.

(iii) ஏன் செயற்கை நுண்ணறிவு முதன்மையானது?

(iv) அறவுணர்வும் தமிழர் மரபும் எவ்வாறு இருந்தது என்பதை விளக்குக.

(v) தானியங்களுக்கு வழங்கும் சொற்கள் குறித்து எழுதுக.

SECTION-D (NON-DETAIL) 10 MARKS.

பகுதி-ஈ (துணைப்பாடம்) 10 மதிப்பெண்கள்

11. பின்வருவனவற்றுள் ஏதேனும் ஒரு துணைப்பாடக் கட்டுரை எழுதுக.

1X10=10

(i) உரைநடையின் அணிநலன்கள்

(ii) புதிய நம்பிக்கை

(iii) புயலிலே ஒரு தோணி

SECTION-E (CREATIVE WRITING) 17 MARKS

பகுதி – உ (படைப்பாற்றல்) 17 மதிப்பெண்கள்

12.(அ) கீழ்க்காணும் காட்சியைக் கண்டு கவினுற எழுதுக. 1X3=3



FOR VISUALLY IMPARED CANDIDATES

(ஆ) பார்வைத்திறன் பாதிக்கப்பட்ட மாற்றுத்திறனாளி மாணவர்கள் மட்டும் எழுத வேண்டிய வினா.

பின்வரும் பழமொழிகளைத் தொடரில் அமைத்து எழுதுக.

(i) அரசன் அன்று கொல்வான், தெய்வம் நின்று கொல்லும்.

(ii) ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாது

13. பின்வரும் கடிதங்களுள் ஏதேனும் ஒரு தலைப்பில் கடிதம் ஒன்று வரைக.

1X8=8

(i) செயற்கை உரங்கள் பயன்படுத்துவதால் மண் எவ்வாறு மாசுபடுகிறது என்பதை விளக்கி உன் தந்தைக்குக் கடிதம் எழுதுக.

(அல்லது)

(ii)உங்கள் பகுதியில் புதிய மருத்துவமனை ஒன்றைக் கட்டித்தருமாறு சுகாதார அமைச்சருக்குக் கடிதம் ஒன்று எழுதுக.

(இரண்டு கடிதங்களிலும் உனது முகவரி அ. ராதை /அ. ராமன் எண்.5, கபிலர் தெரு, நேருநகர், சென்னை- 600 001.)

14. பின்வருவனவற்றுள் ஏதேனும் ஒரு பகுதியின் குறிப்புகளைப் பயன்படுத்திக் கட்டுரை ஒன்று எழுதுக. **1X6=6**

(i) முன்னுரை- தமிழின் இலக்கிய வளம்- கல்வி மொழி – பிறமொழிகளில் உள்ள இலக்கிய வளங்கள்- அறிவியல் கருத்துகள் – பிறதுறைக் கருத்துகள் – தமிழுக்குச் செழுமை – முடிவுரை.

(அல்லது)

(ii) முன்னுரை- சாலைப் பாதுகாப்பு முக்கியத்துவம்- சாலை விதிகளை மதிப்போம்- விதி மீறல் – முடிவுரை.

(அல்லது)

(iii) முன்னுரை- கிரீன்ஹவுஸ் வாயுக்களின் தாக்கம்- புவி வெப்பமடைதல்- புவி வெப்பமயமாதலின் தாக்கம் – முடிவுரை.

MARKING SCHEME FOR

SAMPLE X-STD SAMPLE QUESTION PAPER 2024-2025 (XSTD-TAMIL 006)

மதிப்பெண் வழங்கும் முறை

மாதிரி வினாத்தாள் 2024-2025

பத்தாம் வகுப்பு **மொத்த மதிப்பெண்-80**

X-STD MAXIMUM MARKS-80

தமிழ்-TAMIL

பகுதி அ (படித்தல் திறன்)

UNSEEN PASSAGE-10 MARKS.

1. பலவுள் தெரிவுசெய் வினாக்களுக்கு ஏற்ற விடை (5X1=5)

(i) கணிதத்துறைப் பேராசிரியராக

(ii) கிரேக்கத்தத்துவ ஞானி

(iii) 26 வயதில்

(iv) கலிலியோ

(v) நானூறு

2. பத்தியில் கொடுக்கப்பட்டுள்ள வினாக்களுக்கேற்ற விடை

(i)புண்ணியத் திசை முகம் போயினன் என்ற தொடர்

(ii) வடபுலம்

(iii) கரிகால் வளவன்

(iv)வடபேரிமய மலை

(v) வட திசை

SECTION-B {GRAMMAR} 12 MARKS

பகுதி-ஆ (இலக்கணப் பகுதி) 12 மதிப்பெண்கள்.

3. சான்று தருக விடை

(i) பொறுத்தார்

(ii) மார்கழித்திங்கள்

(iii) காவிரி பாய்ந்தது

(iv) கத்துங்குயிலோசை

(v) திருமால்

4.கோடிட்ட இடங்களை நிரப்புக விடை

(i)அகத்திணை

(ii) ஐயவினா

(iii)பலவின்பால்

(iv)வினைத்தொகை

(v)சொல்லிசை அளபெடை

5. இலக்கணக் குறிப்பு எழுதுக விடை

(i)தொழில்பெயர்

(ii)சொல்லிசை அளபெடை

(iii)பெயரெச்சத்தொடர்

(iv)அடுக்குத்தொடர்

(v)எண்ணும்மை

6. கூறியவாறு செய்க விடை

(i) உடுப்பதும்

(ii)பாடுதல்

(iii)மலர் மணம் வீசியது.

(iv)நெய்தல்

(v) வெற்றிலை பாக்கு

SECTION-C (MAIN COURSE BOOK) 31 MARKS

பகுதி இ (இலக்கியம்) 31 மதிப்பெண்கள்.

7. கோடிட்ட இடங்களைத் திருக்குறள் சீர்களால் நிரப்புக விடை

(i)செறுநர்

(ii)நயத்தக்க

8. செய்யுள் பகுதியைப் படித்து தொடர்ந்துள்ள பலவுள் தெரிவு செய் வினாக்களுக்கு விடை

(i) கம்பராமாயணம்

(ii) பெரிய அலை

(iii) யானைப்படை

(iv) குகன்

(v) கம்பர்

9.பின்வரும் செய்யுள் வினாக்களுள் எவையேனும் மூன்றனுக்கு மட்டும் விடை தருக. 3X3=9

பிழையற்ற முழுமையான விடைகளுக்கு முழு மதிப்பெண் வழங்குக.

10. எவையேனும் மூன்று உரைநடை வினாக்களுக்கு விடை தருக. 3X5=15

பிழையற்ற முழுமையான விடைகளுக்கு முழு மதிப்பெண் வழங்குக

11. பின்வருவனவற்றுள் ஏதேனும் ஒரு துணைப்பாடக் கட்டுரை எழுதுக.

1X10=10

முன்னுரை-1 மதிப்பெண

துணைத்தலைப்புகளுடன் கூடிய பொருளுரை-8 மதிப்பெண்

முடிவுரை-1 மதிப்பெண்

12.(அ) கீழ்க்காணும் காட்சியைக் கண்டு கவினுற எழுதுக. 1X3=3

30 சொற்களுக்குக் குறையாத வருணனையும் (5 தொடர்கள்) தலைப்பும் இருப்பின் முழு மதிப்பெண் வழங்குக.

ஐந்து தொடர்கள் – 2 ½

தலைப்பு – ½

ஆ) உரிய பழமொழிக்குச் சரியான விளக்கம் இருப்பின் முழு மதிப்பெண் வழங்குக.

13.ஏதேனும் ஒரு கடிதம் ஒன்று எழுதுக. 1X8=8

அலுவல் முறைக் கடிதம்

அனுப்புநர்-1

பெறுநர்-1

விளி-1/2

பொருள்-1/2

உள்ளடக்கம்-3

கையொப்பம் -1/2

இடம்,தேதி-1/2

உறைமேல் முகவரி-1

நட்பு/உறவு முறைக் கடிதம்

இடம்,தேதி-1

விளி-1/2

நலம் கேட்டல்-1

உள்ளடக்கம்-3 1/2

கையொப்பம்- 1

உறைமேல் முகவரி-1

14.பின்வருவனவற்றுள் ஏதேனும் ஒரு பகுதியின் குறிப்புகளைப் பயன்படுத்திக் கட்டுரை ஒன்று எழுதுக. **1X6=6**

தலைப்பு-1/2

முன்னுரை-1/2

உட்தலைப்பு மேற்கோளுடன் கூடிய பொருளுரை-4

முடிவுரை-1

தவறின்றி இருப்பின் முழு மதிப்பெண் வழங்குக